**கவனிக்க**.- *27.04.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1757 - 2012 මැයි මස 04 වැනි සිකුරාදා - 2012.05.04

*1757 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 522 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 527 |

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2012, மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான தொழிற்றுறை வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகிறது :-

1. *(அ)* **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

*(1)* ***வானூர்தி பொறியியல் (ஆண்) :***

*(அ) வானூர்தி இயந்திரவியலாளர் (ஆண்)*
*(ஆ) வான் அமைப்பு எந்திரவியலாளர் (ஆண்)*
*(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (ஆண்)*
*(ஈ) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*(2)* ***பொது பொறியியல் (ஆண்) :***

*(அ) வான் படப்பிடிப்பாளர் (ஆண்)*
*(ஆ) வானூர்தி காய்ச்சிப் பொருத்தும் உதவியாளர் (ஆண்)*
*(இ) ஆயுத இயந்திரவியலாளர் (ஆண்)*
*(ஈ) பொது இயந்திரவியலாளர் (ஆண்)*
*(உ) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் (ஆண்)*
*(ஊ) மேற்பரப்பு தொழினுட்ப உதவியாளர் (ஆண்)*
*(எ) செப்பு மற்றும் உலோக தகடு வேலையாளர் (ஆண்)*
*(ஏ) மர கலை வேலையாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி மேலதிக தகைமையாகும்.*

*(3)* ***மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல் (ஆண்) :***

*(அ) வானொலி தொழினுட்பவியலாளர் (ஆண்)*

*(ஆ) தொலைபேசி இயந்திரவியலாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், வீஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*(இ) கணனி தொழினுட்பவியலாளர் (ஆண்/பெண்)*

*(ஈ) தொலைபேசி இயக்குனர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*(4)* ***வைத்திய துறை :***

*(அ) தாதி உதவியாளர் (ஆண்/பெண்)*

*(ஆ) பல் வைத்திய உதவியாளர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலத்தில் சித்தியும் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலதிகமாக ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியும் (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல்/ இணைந்த கணிதம்/ இரசாயனவியல்/ பௌதிகவியல்/விவசாயம் போன்ற பாடங்களில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் சுகாதார அமைச்சின் உயர் பயிற்சி தகுதிகாண் பரீட்சையின் மேலதிக தகைமையாகும்.*

*(5)* ***உபகரணத் துறை :***

*(அ) உபகரண உதவியாளர் (ஆண்/பெண்)*

*(ஆ) எரிபொருள் மீள் நிரப்பாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*(இ) போசனசாலை உதவியாளர் (ஆண்/பெண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*ஆங்கில மொழியில் திறமைச்சித்தி உட்பட, சரளமாக ஆங்கிலம் பேசும் அனுபவம் இருக்குமானால் விமான பணியாளர் என்ற வகையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.*

*(ஈ) உணவு வழங்கல் உதவியாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

(உ) *சீருடை நிர்மாணிப்பாளர் (ஆண்/பெண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். (Over Lock, Button hole, Button Attached, Double Needle, Bar Tack) மேலும் வெட்டுதல், அலங்காரமிடுதல் போன்ற அனுபவம் இருப்பதுடன் தையல் இயந்திரம் கையாலும் ஆளுமை மேலதிக தகைமையாகும்.

(6) ***பரிபாலன துறை :***

(அ) *பரிபாலக உதவியாளர் (ஆண்/பெண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். கணனி சம்பந்தமான அறிவு மேலதிக தகைமையாகும்.

(ஆ) *கணக்கீட்டு உதவியாளர் (ஆண்/பெண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச்சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள். கணனி சம்பந்தமான அறிவு மேலதிக தகைமையாகும்.

(7) ***தொழிற்பாட்டு துறை :***

(அ) *வான் தொழிற்பாடு*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி சித்தியும் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஆ) *தீயணைப்பாளர் (ஆண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(இ) *பூமி தொழிற்பாட்டாளர் (பெண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(8) ***வேறு தொழிற்றுறை (ஆண்/பெண்) :***

(அ) *பொலிஸ் (ஆண்/பெண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.

(ஆ) ***ஏனைய தகைமைகள்.***- இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) *தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(2) *வயது.*- 2012, யூலை 31 ஆந் திகதியன்று ஆண் 18-23 வயது வரை ; பெண் 18-22 வயது வரை

(3) *உயரம்.*- ஆண் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்

(4) *உடல் நிறை.*- 19< உடற்பருமன் சுட்டி <25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}}$$

(உ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.*- (CP2)

(ஊ) *தொலைபார்வை.*- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(எ) *குடியியல் நிலை.*- விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதுடன் தொழிற்பயிற்சியை பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய வான்படை வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 01 (அ) மற்றும் (ஆ) இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த வுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக் கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமை களைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் கவனத்திற்கொள்ளப்படும்.

**4. சேவை நிபந்தனைகள்.**- (அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்கள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| வானூர்தியாளர் | : | ரூபா 1,68,000-6 x 1,440-19 x 1,800 = ரூபா 2,10,840 |
| முன்னணி வானூர்தியாளர் | : | ரூபா 1,70,880-4 x 1,440-19 x 1,800 = ரூபா 2,10,840 |
| கோப்ரல் | : | ரூபா 1,75,200-1 x 1,440 - 10 x 1,800 - 9 x 2,520 = ரூபா 2,17,320 |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,80,240-3 x 1,800 - 9 x 2,520 - 3 x 3,480 = ரூபா 2,18,760 |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,83,120-10 x 2,520 - 3 x 3,480 = ரூபா 2,18,760 |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 1,90,680-3 x 2,520 - 17 x 3,480 = ரூபா 2,67,480 |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 2,11,800-13 x 3,480 = ரூபா 2,57,040 |

மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர் சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள் :***

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 5,850 ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 4,500 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து 850 வரை) ;

(6) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 12,235.20 (உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவச உணவு வசதி) ;

(7) விசேட கொடுப்பனவு.- அடிப்படை சம்பளத்தில் 15% ;

(8) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(9) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(10) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும். (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(11) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 425.10 வழங்கப்படும் ;

(12) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும் ;

(13) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும் ;

(14) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(15) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(16) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(17) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(18) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(19) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(20) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

8. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2012, மே மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வான்படை வீரர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு துறையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். மேலும் பல துறைகளில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவார் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

9. நேர்முகப் பரீட்சை இலங்கை வான்படை ஏக்கல நிலையத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைத் திகதி, நேரம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

10. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். (உடற் பயிற்சியாளர், இசைக் கலைஞர்கள் செய்கை பரீட்சைக்கு தோற்றுவிக்கப்படுவர்.) பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

12. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

14. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்களுக்கான ............................................ பதவி

1. முழுப் பெயர் :----.

(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.

7. மாவட்டம் :----.

8. தேர்தற் தொகுதி :----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

10. தொலைபேசி இலக்கம் :----.

11. பிறந்த திகதி :----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

13. உயரம் : அடி ---- அங்குலம் ----.

14. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

21. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

22. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

5-38

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொறட்டுவை

(இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு)

*தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2012*

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்து 2012 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் வருமாறு :-

1. (அ) **வயது**.- 2012.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வி**.- (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ்/ சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/ மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ்/ சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- தேசிய தொழில் பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

2. **பயிற்சி போதனைகள்**.- சிங்களத்தில் எல்லாப் பாடநெறிகளும் தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறியும் நடத்தப்படும்.

3. **நுழைவுத் தேர்வு**.- தேவையான தகைமைகளையுடைய, கீழே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**பரீட்சை நிலையம்**.- அனுமதிக்கான எழுத்துமூலப் பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். இவை தவிர வேறு மாவட்டங்களிலிருந்து குறிப்பிட்ட அளவிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் அம்மாவட்டத்திலும் பரீட்சை நிலையம் அமைக்கப்படும்.

**எழுத்துமூலப் பரீட்சை**.- இப்பரீட்சை கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இரண்டு வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் ரூபா 400 ஐ ஏதாவதோர் இலங்கை வங்கிக் கிளையில், கணக்கு இலக்கம் 681490, மொறட்டுவைக் கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறிய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது என்பதை விசேடமாகக் கவனத்திற்கொள்க.

5. **ஆரம்ப தேர்வு முறை**.- எழுத்து மூலப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ்வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

6. **இறுதித் தேர்வு முறை**.- நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சையின் 40% உம் நேர்முக பரீட்சையின் 60% உம் புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். பயிற்சிக்கு தெரிவுசெய்யப் படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

7. **பயிற்சி நெறி :**

| | |
|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 04 ஆண்டுகள் |
| மில்றைற்/ வார்ப்பியல் | - 04 ஆண்டுகள் |
| காற்று பதனமாக்கல்/ குளிரூட்டல் | - 03 1/2 ஆண்டுகள் |
| வலு மின்சாரவியல் | - 03 1/2 ஆண்டுகள் |
| ஆயுத இயந்திரவியல் | - 03 1/2 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 03 ஆண்டுகள் |
| டீசல் இயந்திரவியல் | - 03 ஆண்டுகள் |
| உருக்கியிணைத்தல் | - 03 ஆண்டுகள் |
| வாகன உடல் திருத்தலும் வர்ணம் தீட்டுதலும் | - 03 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவுசெய்யப்படும்.

8. **பிணை முறை கைச்சாத்திடல்**.- 4, 3 1/2, 3 வருட பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவோர் இ. ஜே. தொ. ப. நிறுவகத்துடனும் தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். அத்துடன் பயிற்சியின் பின்னர் இலங்கை போக்குவரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப (ஏ4) அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் ;

(இ) இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்தவர்கள்) ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் ''முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும், இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல. 582, காலி வீதி, கல்கிசை'' என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் :

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2012'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.cgtti.slt.lk என்னும் இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

10. **விண்ணப்ப முடிவுத் திகதி**.- விண்ணப்பங்கள் 2012.06.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

முகாமையாளர்,
மனித வளமும் நிர்வாகமும்.

இலங்கை - ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல. : 011-2605625.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொறட்டுவை**

*தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2012*

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) :-----.
(ஆ) முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. (அ) அஞ்சல் முகவரி (ஆங்கிலத்தில்) :-----.
(ஆ) மாவட்டம் :-----.
(இ) மாகாணம் :-----.

3. (அ) பிறந்த திகதி :-----.
(ஆ) 2012.03.31 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
(ஈ) தொலைபேசி இலக்கம் :-----.

4. பால் (ஆண்/பெண்) :-----.

5. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :
ஓர் அமர்வில் பெற்ற பெறுபேறு :
சுட்டெண் :-----.
ஆண்டு :-----.

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| (1) | ................................................... | ...................... |
| (2) | ................................................... | ...................... |
| (3) | ................................................... | ...................... |
| (4) | ................................................... | ...................... |
| (5) | ................................................... | ...................... |
| (6) | ................................................... | ...................... |
| (7) | ................................................... | ...................... |
| (8) | ................................................... | ...................... |

இன்னுமோர் அமர்வில் பெற்ற பெறுபேறு (புத்தாக்குனர் ஆணைக்குழு சான்றிதழ் பெற்றவர்கள் மட்டும்) :
சுட்டெண் :-----.
ஆண்டு :-----.

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| (1) | ................................................... | ...................... |
| (2) | ................................................... | ...................... |
| (3) | ................................................... | ...................... |
| (4) | ................................................... | ...................... |
| (5) | ................................................... | ...................... |
| (6) | ................................................... | ...................... |
| (7) | ................................................... | ...................... |
| (8) | ................................................... | ...................... |

6. இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள துறை :-----.

7. (அ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம் :-----.
(ஆ) பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நிலையம் :-----.
(கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை)

8. பணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :-----.
(ரூபா 400 பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இந்த விபரங்களில் ஏதாவது பொய்யானவை என தெரிவின்முன்போ அல்லது பின்போ கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாக கருதப்படவோ அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

.....................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

5-30

## இலங்கை நூலகர் சேவை தரம் III மற்றும் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2010

*2009.09.24 ஆந் திகதிய 1620/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்டவாறான இலங்கை நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 8 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு இலங்கை நூலகர் சேவை தரம் II இலும், தரம் III இலும் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப்பரீட்சையொன்று 2012, ஒகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.*

2. (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைக்கென பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதகிளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டொழுகுதலும் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவார்.

3. இப்பரீட்சைகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் 2012, யூன் மாதம் 5 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **அடையாள அட்டை**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச்செய்யப் படலாம்.

5. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பங்கள் "ஏ4" அளவினதான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 1 முதல் இல. 5 வரை முதலாவது பக்கத்திலும், இல. 6 முதல் இல. 9 வரை இரண்டாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம். ஆனால், அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களததிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு அவரால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாக உள்ளது.

முதல் முறை இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்தவேண்டிய அவசியமில்லை. எனினும், அதன் பின்னரான அமர்வுகளில் தோற்றும் அலுவலர்கள் ஒரே முறையில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 175 ரூபாவும் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 90 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும். இப்பணத்தொகையை நாட்டில் எந்தவொரு அஞ்சல் அலுவலகத் திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றுதல் தொடர்பாக அனுமதி வழங்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

6. உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தி, சரியாக விண்ணப்பங் களைப் பூர்த்திசெய்து உரிய திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பிவைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டதும், இது தொடர்பான அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்றபின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பில் இருந்து வெளியிடமாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையைப் பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளெதுவும் வழங்கப்பட மாட்டாது.

8. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சை இன்றி

இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் மொழிமூலமானது அதன் பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

9. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கு தனித்தனியாகவும் வெவ்வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. **பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுகை**.- பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சையிற் சித்தியெய்திய அலுவலர்களின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

11. **பரீட்சைத் திட்டம்** :

11.1 நூலகச் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை-

(1) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்.- பாட இலக்கம் 1 - புள்ளிகள் 100

* பகுதி I - பொது நிர்வாகம் (நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) - 50 புள்ளிகள்

(அ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறைவிதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் V முதல் VIII வரையும், அத்துடன் XII, XIV, XXIV, XXVII, XXVIII ஆம் அத்தியாயங்களும் உள்ளடங்கும்.

(ஆ) 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்க (கூட்டிணைப்புச் சட்டம்) மற்றும் 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்க (திருத்தச்) சட்டம்

* பகுதி II - நிதி முறைமைகள்.- (நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) - 50 புள்ளிகள்

(அ) நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (X ஆம் அத்தியாயம் புறநீங்கலாக) நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளும்

(2) நூலக அமைப்பு (நேரம் : 3 மணித்தியா லங்கள்) பாட இலக்கம் 2 - புள்ளிகள் 100

(அ) மாகாண நூலக கட்டளைச் சட்டம்
(ஆ) நூலகக் குழுக்கள்
(இ) நூலகப் பொருட்களைப் பாதுகாத்தல்
(ஈ) வாசிப்போர் கல்வியும் பொதுமக்கள் தொடர்பும்
(உ) நூலகங்களின் வகைகளும் சேவைகளும்
(ஊ) நூலக முகாமைத்துவத்தில் ஆராயப்பட வேண்டிய அடிப்படைகளும் தந்திரோபாயங்களும்
(எ) நூலகமொன்றில் அமுல்படுத்த முடியுமான விரிவுபடுத்தல் சேவைகள்

**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்ப தாரிகள் இப்பரீட்சையிற் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

11.2 நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :

(1) பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள்.- பாட இலக்கம் 3 - புள்ளிகள் 100

* பகுதி I - பொது நிர்வாகம் (நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) - 50 புள்ளிகள்

(அ) இலங்கை அரசியலமைப்புச் சட்டம் பற்றிய அடிப்படை அறிவு

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறைவிதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் V முதல் VIII வரையும். அத்துடன் XII, XIV, XXIV, XXVII, XXVIII ஆம் அத்தியாயங்களும் உள்ளடங்கும்

(இ) 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிகள் பாதுகாப்பு (திருத்த) சட்டம்

(ஈ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பகுதி

(உ) 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சேவை சபைச் சட்டம்

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டம்

* பகுதி II - நிதி முறைமைகள் (நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள்) - 50 புள்ளிகள்

(அ) நிதி ஒழுங்குவிதிகள்.- பகுதி I - நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளும்

(2) நூலக அமைப்பு (நேரம் : 3 மணித்தியாலங்கள்) பாட இலக்கம் 4 - புள்ளிகள் 50

(அ) நூலகக் கட்டிடங்களும் உபகரணங்களும்
(ஆ) அரசாங்க வெளியீடுகளின் நன்மைகளும் அவைகளைப் பயன்படுத்தும் முறைகளும்
(இ) நூலகத் துறையில் பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள்
(ஈ) நூலக முகாமைத்துவத்தில் உள்ள தந்திரோபாயங்கள்
(உ) நிதி முகாமைத்துவம்
(ஊ) நேர முகாமைத்துவம்
(எ) மனிதவள முகாமைத்துவம்
(ஏ) இலங்கையில் தகவல் தொழில்நுட்பம்
(ஒ) நூலகங்களின் வலையமைப்புக்களும் கணனி மயப்படுத்தப்பட்ட முறைகளும்

**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையிற் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
இணைந்த சேவைகள் பிரிவு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, ஏப்பிறல் 17.

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நூலகர் சேவை, தரம் III மற்றும் தரம் II ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2010**

Efficiency Bar Examination For Officers In Grade III And II Of The Sri Lanka Librarians' Service - 2010

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) திரு./திருமதி/செல்வி :----.
1.2 முதலலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.3 முதலெழுத்துக்களுடன் இறுதிப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) - உதா : SILVA, A. B) :----.

2. சேவை நிலையமும் முகவரியும் :----.
2.1 அமைச்சு/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் :----.
2.2 அலுவலக முகவரி :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்)

3. பால் :
பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4. இலங்கை நூலகர் சேவையில் நீங்கள் விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு எதிரில் X அடையாளத்தை இடவும் :----.

| | |
|---|---|
| 4.1 நூலகர் சேவை தரம் III | |
| 4.2 நூலகர் சேவை தரம் II | |

4.3 நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |

5. 5.1 தேசிய அடையாள அட்டை இல. : [ | | | | | | | | | ]

5.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

6. தற்போது வகிக்கும் பதவி :-
6.1 பதவி :----.
6.2 நியமனக் கடிதத்தின் இல. :----.

7. 7.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்களா ? : ----.

7.2 இல்லாவிட்டால் வேண்டிய எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணமாக பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொண்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின் -

இலக்கம் :----.
பணத்தொகை :----.
வழங்கிய அஞ்சல் அலுவலகம் :----.
திகதி :----.

பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழராதவாறு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப்பரீட்சைக்குத் தோற்றி விடையளிப்பதற்கு நான் தகுதியுடையவனென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும், நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுக இத்தால் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** :

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் II/III ஐச் சேர்ந்த ஓர் அலுவல ரென்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,
(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,
(v) உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் உரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை கீறிவிடவும்) :

நான் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

5-52

---

## வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற வர்த்தக திணைக்களத்திற்கு உதவி வர்த்தகப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வர்த்தக திணைக்களத்தில், உதவி வர்த்தக பணிப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் போன்று தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு 2012.06.01 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாவோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

1. **குறிப்பு**.- தாமதமாகக் கிடைக்கப்பெற்ற அல்லது தபாலில் காணாமல்போன விண்ணப்பங்கள் தொடர்பாக விடுக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

2. **சேவை நியதிகள்**.- இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை வழங்குதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது பொது நிருவாக சுற்றறிக்கை இல.06/2006.– எஸ்எல் 1/2006 இற்கமைவாக, ரூபா 22,935-10 x 645-8 x 790 – 17 x 1,050 – ரூபா 53,555.

**வினைத்திறன் தடைகாண் பரீட்சை**.- இரு வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் உள்ளன. முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையினை நியமனத் திகதியிலிருந்து முதல் 3 வருடங்களுக்குள் சித்தியடைதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையினை நியமனத் திகதியிலிருந்து 7 வருடங்களினுள் சித்தியடைதல் வேண்டும். 45 வயதினை பூர்த்தி செய்ததன் காரணமாக வினைத்திறன் தடை காண் பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விலக்களிக்கப்பட மாட்டாது. முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் எழுத்து மூலம் நடாத்தப்படும். இது தொடர்பான விபரங்கள் இணைப்பு இல.01 இல் தரப்பட்டுள்ளது.

இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு, பரீட்சார்த்தி பொருளியல், நிதிசார் வியாபார முகாமைத்துவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகத் திலிருந்து சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றில் பட்டப்பின் பட்டமோ அல்லது பட்டப்பின் படிப்பு டிப்புளோமாவினையோ பெற்றிருத்தல் வேண்டும். அல்லது உலக வர்த்தக நிறுவனத்தினால்(உவநி) வழங்கப்பட்ட பாடநெறிக்கு பதிவு செய்வதற்குரிய தகமையான அடிப்படை பட்டப்படிப்பினை எதிர்பார்க்கின்ற நிபுணத்துவ பயிற்சியுடன் மேற்படி பாடங்களை வழங்குகின்ற பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. **வெளிநாட்டில் சேவை**.- உத்தியோகத்தர்கள் காலத்திற்கு காலம் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பன வினைப் பெறுவதற்கும் உரித்துடையவர்களாவர்.

5. **கல்விசார் தகமைகள்**.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வருவன வற்றினை நிரூபிக்கக்கூடிய வகையிலான திருப்திகரமான ஆவணங் களை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் அல்லது வர்த்தகம் அல்லது வியாபார நிருவாகம் அல்லது பொது நிருவாகம் ஆகியவற்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (சிறப்பு) பட்டம். அல்லது பொருளியல் அல்லது வர்த்தக பாடங்களை உள்ளடக்கிய முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (பொது) பட்டம் ; அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் அல்லது வர்த்தகம் அல்லது வியாபார நிருவாகம் அல்லது பொது நிருவாகத்தில் முதுமாணி அல்லது கலாநிதி பட்டம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமொன்றினையும், இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சட்டத்தரணி அல்லது அதற்கு சமமான சட்டத்துறையில் தொழில்சார் தகமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் சட்டம், நிருவாகம், அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஆகக்குறைந்தது 3 வருட சேவை அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(iv) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தில், அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தின் அங்கத்துவத்திற்கு சமமாக கணக்கியிலில் தொழில்சார் தகமையுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமொன்றினையும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சட்டம், நிருவாகம், அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஆகக்குறைந்தது 3 வருட சேவை அநுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் அனைத்து தகைமைகளையும் விண்ணப்ப முடிவுத்திகதியன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **வயது எல்லை**.- பரீட்சார்த்தி, விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றுவோருக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

7. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- அடிப்படைத் தகமைகளைப் பூர்த்தி செய்கின்றவர்களுக்கு எழுத்துமூலமான பரீட்சையானது, பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடவிதானங்களின் நியதிகளின்படி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையானது தகமைகளையும் சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியீடு செய்தல் என்பன பரீட்சை ஆணையாளர் நாயகத்தினாலேயே தீர்மானிக்கப்படும்.

***பரீட்சை நடைமுறை :***

(1) நுண்ணறிவு பரீட்சை (காலம் : 2 மணித்தியாலம்)
- புள்ளிகள் - 100

(2) பொதுவான வினாப்பத்திரம் (வர்த்தகம் மற்றும்பொருளியல்) (காலம் : 2 மணித்தியாலம்)
- புள்ளிகள் - 100

(3) ஆங்கிலம் (காலம் : 2 மணித்தியாலம்)
- புள்ளிகள் - 100

பாடவிதானம் :

நுண்ணறிவு பரீட்சை.- பரீட்சார்த்தியின் காரணத்தை ஆராயும் தன்மை, பகுப்பாய்வு சிந்தனை மற்றும் தீர்மானம் நிறைவேற்றுதல் போன்றவற்றினை தீர்மானிப்பதற்கான பல்வேறு வினாக்களைக் கொண்டிருக்கும்.

பொது வினாப்பத்திரம்.- வெளிநாட்டில் இலங்கையின் வர்த்தக மற்றும்பொருளாதார பின்னணி தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவினை சோதிப்பதற்கான வினாக்களைக் (வர்த்தகம் மற்றும் பொருளியல்) கொண்டிருக்கும்

ஆங்கிலம்.- பரீட்சார்த்தியின் ஆங்கில மொழி இலக்கணம், கலைச்சொற்கள் மற்றும் புரிந்துணர்வு தன்மை ஆகியவற்றினை தீர்மானிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

8. (i) விண்ணப்பப்படிவமானது பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் தயாரிக்கப்படுதல் வேண்டும். "ஏ4 அளவிலான தாளின் முதல் பக்கத்தில் 01 இலிருந்து 09 வரையிலான பிரிவுளை உள்ளடக்கிய தாக" இருத்தல் வேண்டும். மீதி பகுதிகள் பக்கம் 2 இலும் 3 இலும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து பதிவுகளும் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களின் போட்டோ பிரதிகளை கைவசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் விண்ணப்பதாரிகள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

(iv) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

(அ) பரீட்சையின் பெயர் :----.

(ஆ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.
முகவரி :----.

(இ) விண்ணப்பம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட திகதி, பதிவு இல. மற்றும் அஞ்சல் அலுவலகம் ----------------------
சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்தில் அல்லது தமிழ் விண்ணப்பங்களில் தமிழில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயரானது, மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,000 ஆகும். நாடெங்குமுள்ள ஏதேனும் பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இல. வருமான தலைப்பிற்கு வரவு வைக்கக்கூடியதாக மேற்படி பரீட்சைக்கான கட்டணத்தினை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய இடத்தில் முறையாக ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களையும் அதற்குரிய இடங்களில் குறிப்பிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியொன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

10. **பரீட்சை** :

(i) பரீட்சை தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
(ii) பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமைகள் அரச சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

11. ஏற்கனவே அரச சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், விண்ணப்பங்களை பரீட்சார்த்தி அனுப்பி வைக்கும் திகதிக்கு முன்பாக அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு நேரடியாக அனுப்பி வைக்க முடியும்

*12.* விண்ணப்பங்கள் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய ஆவணத்தினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கே அனுப்பி வைத்தல் வேண்டும். அவரல்லாத பரீட்சைகள் திணைக்களத்தின் வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்தல் ஆகாது.

*13.* இந்த வர்த்தமானி அறிவித்தலின் பகுதி (I) தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் பொது நிபந்தனைகள் தொடர்பில் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

*14.* ***பரீட்சைக்கான அனுமதி***.- (அ) பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களில் அடிப்படைத் தகமைகளை பூர்த்தி செய்கின்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையினை சமர்ப்பிக்க மறுக்கும் பரீட்சார்த்தி எவரேனும் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) அனைத்து பரீட்சார்த்திகளும் குறித்துரைக்கப்பட்ட மண்டபத்தில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட மண்டபத்துடன் தொடர்புடைய ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காக தோற்றுகின்ற முதல் தடவையிலேயே அனுமதி அட்டையினை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும்.

***குறிப்பு***.- பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டையினை வழங்குவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகமையனை அவர் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

*15.* ***பரீட்சார்த்தியை இனங்காணுதல்***.- பரீட்சார்த்தி ஒவ்வொரு தடவையும் பரீட்சைக்குத் தோற்றும் போதும் மேற்பார்வையாளரிடம் தனது ஆளடையாளத்தினை திருப்பதிகரமாக நிரூபித்தல் வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*16.* பரீட்சையின் நோக்கத்திற்காக, இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி வகிக்கும் பதவி மற்றும் அவர் வேலை செய்யும் இடம் என்பன கவனத்தில் கொள்ளப்படும். விண்ணப்பிக்கப்பட்டதன் பின்னர் அவரின் பதவி மற்றும் வேலை புரியும் இடத்தில் ஏதெனும் மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

*17.* ***தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை***.- பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் தகமைகளைப் பூர்த்தி செய்யாமையானது கண்டு பிடிக்கப்படுமாயின் அவரின் பரீட்சார்த்தி தகமையானது இரத்துச் செய்யப்படும். நியமனத்தின் பின்னர் விண்ணப்பத்தில் தவறான தகவல் ஏதேனும் வழங்கப்பட்டிருப்பது அல்லது முக்கியமான விடயமொன்றினை தெரிந்தே மறைத்திருப்பது கண்டுபிடிக்கப்படுமாயின் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

*18.* இத்தகைய ஒழுங்கு விதிகளினால் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் அரச சேவை ஆணைக் குழுவின் செயலாளரின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

*19.* பரீட்சைத் திட்டம்.- (அ) இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தியானவர், பதவிக்கு விண்ணப்பித்தமைக்கு தகுதிபெற்ற பரீட்சையில் சித்தியெய்திய மொழியில் அல்லது அரச கரும மொழிகளில் தோற்றுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியானவர், மேற்படி பரீட்சையில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் தோற்றியிருப்பாராயின், பரீட்சார்த்தியானவர், பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த அதிகளவிலான பாடங்களின் மொழியில் அல்லது அரச கருமமொழியில் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) ஒரு மொழியில் தோற்றி பிரதான பாடத்தில் சித்தியடைந்து விசேட பட்டத்தினைப் பூர்த்தி செய்துள்ளதும் துணைப் பாடங்களை ஏனைய மொழிகளில் தோற்றி சித்தியடைந்துள்ளதுமான பரீட்சார்த்திகள் பிரதான பாடத்தினை எம்மொழியல் தோற்றி சித்தியடைந்துள்ளாரோ அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) "தகுதி பெற்ற பரீட்சை" எனும் பதமானது மேலே (அ) மற்றும் மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையினைக் குறிக்கின்றது.

(ii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையின் அனைத்து பாடங்களையும் ஒரே மொழியில் எழுதுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலமானது எச்சந்தர்ப்பத்திலும் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

*20.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தயாராய் இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் (மு.கு.கல்வி சார் தகமைகளின் நியதிகளின்படி, பாடசலைகளில் உபயோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களும் ஞானஸ்தான சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படும்) ;

(ஆ) பட்டப்படிப்பு அல்லது உயர்கல்வி சான்றிதழ்கள் ;

(இ) இரண்டு நற்சான்றிதழ்கள்.- அதில் ஒன்று கல்விப் பணிப்பாளரிடமிருந்து அல்லது பல்கலைக்கழகத்தின் கலாநிதி அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) தொழில்சார் மற்றும்/தொழில்நுட்ப சான்றிதழ்கள் ;

(உ) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உயர் பரீட்சைகளில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ்கள் ;

(ஊ) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

**குறிப்புக்கள்**.- (i) விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணத்தையோ அல்லது ஏதேனும் ஆவணத்தின் போட்டோ பிரதியினையோ அனுப்பிவைத்தல் கூடாது ;

(ii) ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறி பின்னர் அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்தில்கொளளப்பட மாட்டாது.

21. **நியமனத்திற்கான தெரிவு நடைமறை.**- பல பரீட்சார்த்திகள் ஒரேயளவிலான புள்ளிளைப் பெறுவார்களாயின், அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும். தெரிவானது எழுத்து மூல பரிட்சையில் பெறப்படும் அதி கூடிய புள்ளிகளின் அடிப்டையில் மேற்கொள்ளப்படும்.

22. **விசேட குறிப்புக்கள்** :

(i) 2006.04.25 ஆம் திகதிய 06/2006 ஆம் இல. பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி, வர்த்தக திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகதர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த அறிவித்தலின் கீழ் ஆடசேர்ப்பு செய்யப்படும் அனைத்து உதவி பணிப்பாளர்களுக்கும் புதிய திட்டதின் பதவி உயர்வு தொடர்பிலான அனைத்து விடயங்களும் பொருந்துவதுடன் முன்னைய திட்டங்கள் வலுவற்றதாவதுடன் செல்லுபடியற்ற தாகும்.

(ii) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 07/2007 இன்படி, தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் இச்சேவைக்கு இணைந்து கொண்ட மொழிக்கு மேலதிகமாக தமது அரசகரும மொழி/ மொழிகளில் நியமனத் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி யினுள் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iii) இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2009.02.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்டவாறு அரச சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நடைமுறை விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(iv) இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அரச சேவை ஆணைக்குழு மற்றும் பொது நிருவாக அமைச்சு ஆகியவற்றினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் சுற்றறிக்கைகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(v) சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூலமான விடயங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருக்குமிடத்து சிங்கள மொழி மூலமான வடிவமே இறுதியானதாக கொள்ளப்படும்.

23. அரச சேவை அணைக் குழுவானது வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கையனையோ அல்லது குறித்த சில எண்ணிக்கையினையோ நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ உரிய தற்றுணி பினைக் கொண்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

திலக் கொல்லூரே,
செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு,
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு 03,
2012.04.11.

இணைப்பு இல. I

**முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை**

இந்த எழுத்து மூல பரீட்சையானது ஒவ்வொன்றும் 2 மணித்தியா லங்களைக் கொண்ட பின்வரும் பாடங்களைக் கொண்டுள்ளது :

(I) நிதி முகாமைத்துவம்.- (அ) அரச கணக்குகள் மற்றும் கேள்வி நடைமுறைகள், நிதிப் பிரமாணங்களின் 5, 6 மற்றும் 13 ஆம் அத்தியாயங்கள் அறிவினைத் தீர்மானிப்பதற்கு.-

(i) தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(ii) இலங்கையின் நவீன பொருளாதார அபிவிருத்திஇ உள்நாட்டு வர்த்தகம் மற்றும் அரசாங்க கொள்கை தொடர்பான அறிவினைத் தீர்மானிப்பதற்கு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள

இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளையேனும் பெறுதல் வேண்டும்.இரண்டு பாடங்களை ஒரே தடவையிலும் அல்லது தனித்தனியாக பல அமர்வுகளிலும் பூர்த்திசெய்ய முடியும். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் இப்பரீட்சைகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

உதவி வர்த்தக பணிப்பாளர் பதவிக்கான
மாதிரி விண்ணப்பப்படிவம்

**வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற வர்த்தக திணைக்களத்திற்கு உதவி வர்த்தகப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்கான மொழி மூலம் : 
(சிங்களம் -2, தமிழ் -3, ஆங்கிலம் -4)
(கூட்டுக்குள் உரிய இலக்கத்தினை எழுதுக)

(விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வர்த்தக திணைக்களத்தின் உதவி வர்த்தக பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.)

1. (i) முதலெழுத்தக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
உதா :- சில்வா ஏ.பி.
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முதலெழுத்துக்களுடன்பெயர்(சிங்களம்/ தமிழில்) :----.

2. தபால் முகவரியும் தொலைபேசி இலக்கமும் :----.
(முகவரியில் ஏதேனும் மாற்றம் இருப்பின் உடனடியாக அறிவித்தல் வேண்டும், அனுமதி அட்டை இந்த முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்.)

3. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பிறந்த திகதியும் இடமும் :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(i) பிறந்த இடம் :-
(ii) வர்த்தமானி அறிவித்தலின் படியான வயது :-

வருடம் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5. இனம் :
சிங்களம் - 1
இலங்கைத் தமிழ் - 2
இந்திய தமிழ் - 3
முஸ்லிம் - 4 ☐
பறங்கியர் - 5
மலாயர் - 6
ஏனையோர் - 7

(சரியான இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

6. வதிவிட மாவட்டம்:-
7. திருமணமானவரா? திருமணமாகாதவரா? விதவையா? :----.
8. கல்விசார் தகமைகள் :-
(அனைத்து பட்டங்கள், சிறப்பு சித்திகள், தொழில்சார் மற்றும் தொழில் பயிற்சி தகமைகள் தொடர்பான விபரங்கள், பாடங்கள் வழங்கிய நிறுவனங்களின் பெயர்கள் ஆகியவற்றினை குறிப்பிடுக.)

| பரீட்சை /பட்டம் | ஆண்டு | பாடம் |
|---|---|---|
| | | |
| (1) சிங்களம் | (2) தமிழ் | (3) ஆங்கிலம் |
| | | |

9. பொதுவான கல்வி:12 வயதின் பின்னர் கல்வி பயின்ற கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்

| கல்வி நிறுவனம்/பாடசாலை | இருந்து | வரையில் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |

தொழில்சார் கல்வி :-

| நிறுவகம் | இருந்து | வரையில் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |

10. விளையாட்டுக்களில் ஈட்டிய சாதனைகள், விளையாட்டுத் துறையில் வகித்த பொறுப்பு வாய்ந்த பதவிகள் பற்றிய விபரங்கள் : ----.

11. (அ) கடனிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளீர்களா? கடன்பட்டிருப்பின் எவ்வளவு ?

(ஆ) நீதிமன்றத்தில் ஏதேனும் குற்றம் தொடர்பில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனில், வழக்கு திகதி, இலக்கம் என்பவற்றுடன் அனைத்து விபரங்களையும் தருக: -----.

12. (தற்போதைய தொழில் மற்றும் முன்னைய தொழில் என்பவற்றினைத் தருக. பதவியேற்ற திகதி, சேவையிலிருநது விலகிய திகதி, இறுதியாகப் பெற்ற வருடாந்த சம்பளம் ) :

| பதவி | இருந்து | வரையில் | வருடாந்த சம்பளம் (ரூபா) |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |
| (4) | | | |
| (5) | | | |
| (6) | | | |
| (7) | | | |

மு.கு.- அரசாங்க சேவையிலிருந்து விலகியமைக்கான காரணத்தினை கீழே 14 இல் தரப்பட்டுள்ள கூட்டில் குறிப்பிடுதல் வேண்டும்.

13. விசேட தகமைகள்.- (வர்த்தானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விசேட தகமைகள் மற்றும்/அல்லது அநுபவத்தினைக் கொண்டுள்ளீர்களா? அவ்வாறாயின் திகதிகள் உள்ளடங்கலாக முழு விபரத்தினையும் குறிப்பிடுக. ஏதேனும் விசேட தகமைகள் குறித்து குறித்துரைக்கப்பட்டுள்ளதா என்பதனை வர்தமானி அறிவித்தலில் பார்க்கவும்.)

14. வேறு ஏதேனும் தகவல் இருப்பின் :----.

15. (மூலப் பற்றுச் சீட்டின் ஓரத்தினை இங்கே ஒட்டுக.) :-

☐

பற்றுச் சீட்டு இல :----.
திகதி :----.
மாவட்ட /பிரதேச செயலகம் :----.

16. இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானது சரியானதுமென இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலும் ஏதேனும் தவறான அல்லது பிழையான தகவல் ஏதேனும் வழங்கப்பட்டமையானது தெரிவுக்கு முன்பாக கண்டுபிடிக்கப்படுமிடத்து தெரிவுக்கான தகைமையினை இழப்பதாகவும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப் படுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப் படுவேன் என்பதனையும் நான் நன்கு அறிவேன். அத்துடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை மற்றும் பெறுபேறுகளை வெளியீடு செய்தல் தொடர்பாக வழங்கப் பட்டுள்ள சட்டவிதி களை நான் நன்கறிவேன் என்பதனையும் தெரியப்படுத்து கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***விண்ணப்பதாரி, அரசாங்க சேவையில் பணியாற்றுகின்றவராயின், விண்ணப்பதாரி தொடர்பான திணைக்களத் தலைவரின் அறிக்கை :-***

*மேலே 12 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் /பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டுமெனவும் இவர் மேற்படி பரீட்சைக்குரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை இதில் ஒட்டியுள்ளார் என்றும், இவரின் வேலையும் நடத்தையும் ............................... என்றும் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இவரை தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்கப்பட முடியாது என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.*

----,
*திணைக்கள/நிறுவன தலைவரின் கையொப்பம்.*

*பதவி :----.*
*திகதி :----.*

*6-34*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்றீம் கோட்’ புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை “அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5” என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 04.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2012 |
| | | வெள்ளி | 11.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2012 |
| | | வெள்ளி | 18.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2012 |
| | | வெள்ளி | 25.05.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2012 |
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2012 |
| | | வெள்ளி | 08.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2012 |
| | | வெள்ளி | 15.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2012 |
| | | வெள்ளி | 22.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2012 |
| | | வெள்ளி | 29.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2012 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2012 |
| | | வெள்ளி | 13.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2012 |
| | | வெள்ளி | 20.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2012 |
| | | வெள்ளி | 27.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.